RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s1010

OPEN ACCESS

கபிலரின் புறப்பாடல்களில் அடித்தள மக்களின் வரலாறு

சொ. அருணன் [அ, *]

[அ] தமிழ்ப் பண்பாட்டு மையம், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி-630003, தமிழ்நாடு, இந்தியா.

Kapilar's Puram Poems on The History of The People at the Lowest – Rung

C. Arunan [a, *]

[a] Centre for Tamil Culture, Alagappa University, Karaikudi-630003, Tamil Nadu, India

* Corresponding Author: arunankapilan@gmail.com

Received: 03-09-2021
Revised: 30-05-2022
Accepted: 06-06-2022
Published: 10-08-2022

Check for updates

ABSTRACT

Kapilar is a much-revered Sangam poet. He is also known as Kurinji Kapilar as he has highlighted the Thinai, Kurinji. The great Sangam literature contains many poems of Kapilar. Kapilar was mostly with the common people and rendered songs on their contributions to art, craft, cultural values and their living styles in tune with the nature.Instead of singing the praise of Chera, Chola and Pandya, the trinity of Tamizhagam, Kapilar rendered wonderful songs on the greatness of Paari, the ruler of Parambu land. Kapilar praised the humility and generosity of Paari. Paari's kindness towards poets, artists and guests turned at his doorsteps was uncomparable. He was also full of compassion even towards creatures living around him. The greatest quality of sharing all his wealth with poets touched the heart of Kapilar who became the greatest admirer and bossom friend of him. Paari's humanitarian gestures towards the downtrodden made Kapilar narrate the contribution of the lay- men to up- keep the Tamil Culture, language and values alive. The author of this research article articulates how significant it is to learn the socio-economic, cultural life of the commoners of Sangam period through the Puram songs of Kapilar.

Keywords: Kapilar, Puram Songs, Paari, Sangam Literature

முன்னுரை

சங்க இலக்கியத்தில் மிகுதியான பாடல்களை இயற்றியவர் கபிலர் ஆவார். அதிலும் குறிஞ்சித் திணையைச் சிறப்பித்து பாடியவர் இவரே. அதனால் குறிஞ்சிக் கபிலர் என்றே போற்றப்பட்டார். சங்க காலத்தில் வாழ்ந்த மற்ற புலவர்கள் பலரும் பெருவேந்தர்களையும் வள்ளல்களையும் போற்றிப் பாடித் தங்கள் புகழை நிறுவிக் கொண்டனர். ஆனால் கபிலர் அடித்தள மக்களின் வாழ்க்கையும் இயற்கையின் சமநிலையையும் எப்போதும் விரும்பினார் என்பதை அவருடைய புறப்பாடல்கள் எடுத்துரைக்கின்றன. அதைக் குறித்துச் சுருக்கமாக இக்கட்டுரை விவரிக்கிறது.

சங்க இலக்கியத்தில் கபிலரின் பங்களிப்பு

கபிலர் சங்க இலக்கியங்களாகிய எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய இரண்டிலும் பாடியுள்ள மொத்தப் பாக்களின் எண்ணிக்கை 325 ஆகும். அவற்றுள் புறப்பாடல்கள் 38. அதிலும் பதிற்றுப்பத்து முழுக்க முழுக்க சேர மன்னனைப் பற்றி மட்டுமே பாடப்பட்டது. மீதமுள்ள 28 பாடல்களும் பிற மன்னர்களையும் பாடியதாகும். இப்பாடல்களில் பெரும்பகுதி அரசு அதிகாரத்தை வெறுத்தும், கொடிய

போரினைக் கடிந்தும் அடித்தள மக்களின் வாழ்வினைப் போற்றியும், அதற்குத் துணையாகும் வள்ளலாகிய பாரியைப் புகழ்ந்தும், அவனது மறைவால் நாடு அடையும் வீழ்ச்சியைக் கண்டு வெதும்பியும் அமைகின்றன. எப்போதும் எளிமையையும் எளியோர் வாழ்வினையும் ஏற்றுப் போற்றியவர் கபிலர். அரச அதிகார மமதையும் போர் வெறித்தனங்களும் இல்லாது, சமூக ஒழுங்கினை மதித்து, குடிபுறம் காத்தோம்புகிற, கலைஞர்களை உணர்ந்து போற்றுகிற ஒருவனைத் தன்னுடைய பாட்டுடைத் தலைவனாகக் கொள்ள விரும்பினார். இத்தகைய பண்புநலன்கள் இல்லாத காரணத்தால் அவர், மூவேந்தர்களுள் ஒருவனாகிய செல்வக்கடுங்கோ வாழியாதன், மலையமான் திருமுடிக்காரி, வையாவிக் கோப்பெரும்பேகன், விச்சிக்கோ, இருங்கோவேள் ஆகியோரை மறுதலித்தார். மாறாக முந்நூறு ஊர்களை உடைய குறுநில மன்னனாக விளங்கிய பாரியைத் தன் தலைவனாகவும் உயிர் நண்பனாகவும் ஏற்றுப் போற்றினார். பாரியைப் போலவே கபிலர்தம் வாழ்வும் எளிமையோடு அடித்தள மக்களுடன் இணைந்ததாக அமைந்திருந்தது.

கபிலரின் எளிய வாழ்வு

பொன்னுக்கும் பொருளுக்கும் வேண்டித் தகுதியில்லாதவரைப் புகழ்ந்து பாடும் வழக்கம் கபிலருக்கு எப்போதும் இருந்ததில்லை. “கபிலர், மாசிலாத உளத்தினராயும் இழுக்கிலாத ஒழுக்கினராயும் வாழ்ந்தனர். இதனை, ‘புலனழுக்கற்ற அந்த ணாளன்’ என்று மாறோக்கத்து நப்பசலையார் கூறியிருப்பதனால் அறியலாகும். கபிலர், இல்வாழ்க்கை மேற்கொண்டவர் என்றும், வறுமை நிலையிற் சிலகாலம் வருந்தினர் என்றும் கருத இடமுள்ளது” (Venkatarajulu Reddyar, 1998). வையாவிக் கோப்பெரும்பேகனை இவர் பாடிய பாட்டில்,

“சுரனுழைந்து வருந்திய ஒக்கல் பசித்தெனக்

சீறூ ராங்கண்

வாயிற் றோன்றி வாழ்த்தி நின்று

நின்னும் நின் மலையும் பாட’ (Puliyur kesigan, 2010)

என்று கூறியிருப்பதனாலும் சேரமான் செல்வக் கடுங்கோவினைப் பாடிய பாட்டுகளுள் ஒன்றில்,

காண்கு வந்திசின் கழறொடி யண்ணல்

உயர்ந்த

மழையினும் பெரும்பயன் பொழிதி அதனால்

பசியுடை யொக்கலை ஒரீஇய

இசைமேந் தோன்றல் நின்பாசறை யானே” (Puliyur kesigan, 1974)

என்று குறிப்பதனாலும் இவரது வறிய நிலைமை புலனாகும். “பதிற்றுப்பத்தின் உரையாசிரியர், ‘மழையினும் பெரும்பயம் பொழிதி அதனால் அண்ணல், தோன்றல், பசியுடை யொக்கலை (பசி) ஒரீஇய, பாசறையானே நின் நோன்றாள் வாழ்த்திக் காண்குவந்திசின் ‘என்று இயைத்துப் பொருள் கூறியிருப்பது இங்கு அறியத்தகும்” (Venkatarajulu Reddyar, 1998).

கபிலரின் வெளிவந்த பண்புகள்

கபிலர் போர்வெறியை இகழ்ந்தவர். போரினால் மக்கள் அடையும் இன்னல்களையும், இயற்கைக்கு ஏற்படுகிற அழிவினையும் அவர் கருதிப் போர் செய்யும் அரசர்களிடமிருந்து விலகினார். அவ்வாறு முதன் முதலில் செல்வக்கடுங்கோ வாழியாதனைச் சந்தித்த வேளையில் அவன் போர் விருப்பினனாக இருந்தது கண்டு அவனைப் பாடும் வேளையில்,

“வையங் காவலர் வழிமொழிந் தொழுகப்

போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறா

திடஞ்சிறி தென்னு மூக்கந் துரப்ப

கடந்தடு தானைச் சேர லாதனை

யாங்கன மொத்தியோ வீங்குசெலன் மண்டிலம்

பொழுதென வரைதி புறக்கொடுத் திறத்தி

மாறி வருதி மலைமறைந் தொளித்தி

அகலிரு விசும்பி னானும

பகல்விளங் குதியாற் பல்கதிர் விரித்தே"

என்று இருகுறிப்புத் தோன்றக் கபிலர் சுட்டுகிறார் (Puliyur kesigan, 2010). சூரியனோடு ஒப்புப்படுத்தினால் சேரனுக்கு இரவும் இல்லை. புறமுதுகிடுவதும் இல்லை. மாறுபட்ட போக்கில்லை. ஒரு பகலுக்குள்ளே ஓய்ந்து போகிறது சூரியன். ஆனால் இரவிலும் கூட ஓயாது போர்மேற்கொண்டலைபவன் அவன் என்று குறித்துக் காட்டுகிறார். இதனால் கபிலரின் போர்விரும்பாப் பண்பை அறியலாம். அதைப் போலவே மீண்டும் ஒரு பாடலிலும் அவனுடைய கைககளை விடவும் தன் கைகள் மென்மையாக இருப்பதைக் குறித்தும் போரிகழ்ந்தே பாடுகிறார்.

"கடுங்கண்ண கொல் களிற்றால்

காப் புடைய எழு முருக்கிப்,

பொன் இயல் புனை தோட்டியான்

முன்பு துரந்து, சமந் தாங்கவும்

பார்உடைத்த குண்டு அகழி

நீர் அழுவம் நிவப்புக் குறித்து,

நிமிர் பரிய மா தாங்கவும்

ஆவம் சேர்ந்த புறத்தை தேர்மிசைச்

சாப நோன்ஞாண் வடுக்கொள வழங்கவும்

பரிசிலர்க்கு அருங்கலம் நல்கவும் குரிசில்!

வலிய ஆகும் நின் தாள்தோய் தடக்கை,

புலவு நாற்றத்த பைந்தடி

பூ நாற்றத்த புகை கொளீஇ, ஊன்துவை

கறிசோறு உண்டு வருந்துதொழில் அல்லது

பிறிதுதொழில் அறியா ஆகலின், நன்றும்

மெல்லிய பெரும! தாமே, நல்லவர்க்கு

ஆரணங்கு ஆகிய மார்பின், பொருநர்க்கு

இருநிலத்து அன்ன நோன்மை

செருமிகு சேஎய்! நின் பாடுநர் கையே"

எனுமாறு போர்த்தொழில் புரியும் தாள்தோய் தடக்கை என்று சேரனது கைகளைக் குறிப்பிடுகிறார் (Puliyur kesigan, 2010). இக்குறிப்பு புகழ்ச்சியைப் போலத் தெரிந்தாலும் இகழ்ச்சி தோன்றவே பாடப்பட்டது என்றும், போரினால் இறந்துபடும் அடித்தள மக்களின் வரலாற்றை

நோக்கியது என்றும் அறியலாம். மேலும், புலவு நாற்றத்த பைந்தடி பூ நாற்றத்த புகை கொளீஇ, ஊன்துவை கறிசோறு உண்டு வருந்துதொழில் அல்லது பிறிதுதொழில் அறியா ஆகலின்' என்பதனால் அடித்தள மக்களின் வாழ்வியலோடு தன் வாழ்வையும் இணைத்துக் கொண்ட கபிலரின் பண்பினையும் உணரலாம்.

பதிற்றுப்பத்தில் பாடும்போதும் கூடச் சேரனுடைய தங்குமிடம் புலாஅம் பாசறையாக யானையின் சதைத் துண்டங்கள் நிறைந்து புலால் நாற்றமெடுப்பதாகப் போர் வெறியை உணர்த்துகிறது. ஆனால் தன்னுடைய தலைவனாகிய வேள்பாரியின் பறம்புமலை பலாஅம் பழுத்த பசும்புண் அரியலாக பலாவின் மணம் கமழ்ந்து இயற்கைச் சூழல் மிகுந்து விளங்குகிறது என்று தொடங்குவது இங்கு பொருந்தக் காண்பதாகும்.

புலவர்கள் சமூகத்தின் அடித்தட்டு மக்களுடன் இணைந்து வாழ்பவர்கள். ஒரு சாமானிய மனிதனுக்குத் தரப்படும் மதிப்பினைக் கொண்டே அந்தச் சமூகத்தின் மானுடத்தன்மை புலப்படுகிறது என்று கருதுகிறவர்கள். ஆளுந்தொழிலுக்கு இணையாகவும் கலைத்தொழிலின் தலைமையாகவும் விளங்கும் கவிச்சிறப்பினை அறியாத வேளையில் புலவருக்குச் சினம் மேலிடுகிறது. அடித்தள நிலையில் வாழும் பரிசில் மாக்களையும் புலவர்தம் பெருமையையும் தனித்து அறியாத மலையமான் திருமுடிக்காரியைப் பாடும் வேளையில்,

"ஒருதிசை ஒருவனை உள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசில் மாக்கள்
வரிசை அறிதலோ அரிதே பெரிதும்
ஈதல் எளிதே மாவண் தோன்றல்
அதுநற்கு அறிந்தனை ஆயின்
பொதுநோக்கு ஒழிமதி புலவர் மாட்டே!" (Puliyur kesigan, 2010)

என்று சினந்து கொள்கிறார். 'பரிசில் பெற வருவோர் மொழிப்புலமை, கலைப்புலமை ஆகியவற்றுள் தலைசிறந்தவர்களாயினும் பிறர் கொடையை எதிர்பார்ப்பதால் மாக்கள் என்றார் போலும் (Gurusamy, 2000). ஆதலால் யாவராயினும் பொதுநோக்கு ஒழித்து வரிசை அறிந்து தருதலே மன்னவன் கடப்பாடு என்று உணர்த்தியதை அறியலாம்.

அதுபோலவே, மக்களில் மட்டுமல்லாது அரசர்களிலும் கூட அடித்தள மக்கள் திகழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் 'காலை நேரத்திலேயே கள்ளை அருந்தி நாளோலக்கத்தில் வீற்றிருக்கும் மகிழ்ச்சியிலே மிதப்பவர் ஆவர். அவர்கள் எவர்க்கும் தேர்களை இரவலர்க்கு ஈதல் எளியது'. என்றும் கபிலர் சுட்டியிருப்பதை (Gurusamy, 2000). நாள் கள் உண்டு, நாள் மகிழ் மகிழின்,

"யார்க்கும் எளிதே, தேர் ஈதல்லே
தொலையா நல் இசை விளங்கு மலையன்
மகிழாது ஈத்த இழை அணி நெடுந் தேர்
பயன் கெழு முள்ளூர் மீமிசைப்
பட்ட மாரி உறையினும் பலவே"

என்ற பாடலின் வழியாக அறியலாம் (Puliyur kesigan, 2010) அதைப் போலவே அடித்தட்டு மக்களின் (குறவர்) ஒழுக்கமாக விளங்குகிற ஒருவனுக்கு ஒருத்தி என்னும் தமிழிய மரபினைத் தவற விட்ட பேகனை இகழ்ந்து

'மலை வான் கொள்க!' என, உயர் பலி தூஉய்,
'மாரி ஆன்று, மழை மேக்கு உயர்க!' எனக்
கடவுள் பேணிய குறவர் மாக்கள்,

பெயல் கண்மாறிய உவகையர், சாரல்

புனத் தினை அயிலும் நாட! சினப் போர்க்

கை வள் ஈகைக் கடு மான் பேக!

யார்கொல் அளியள்தானே நெருநல்,

சுரன் உழந்து வருந்திய ஒக்கல் பசித்தென,

குணில் பாய் முரசின் இரங்கும் அருவி

நளி இருஞ் சிலம்பின் சீறூர் ஆங்கண்,

வாயில் தோன்றி, வாழ்த்தி நின்று,

நின்னும் நின் மலையும் பாட, இன்னாது

இகுத்த கண்ணீர் நிறுத்தல் செல்லாள்,

முலையகம் நனைப்ப, விம்மி,

குழல் இனைவதுபோல் அழுதனள், பெரிதே?

எனுமாறு அறிவுறுத்திப் பாடுகிறார் (Puliyur kesigan, 2010). 'குறவர் மாக்கள் புனைத் தினம் உண்பர் என்பதன் குறிப்பு. அவர்கள் பாடுபட்டு விளைத்த தினையையே உண்கின்றனரேயன்றிக் கடைத்தினை அன்று என்பதாம். இவ்வாழ்வியல் முறையை, 'தம்இல் இருந்து தமது பாத்து உண்டற்று' என்று திருக்குறளின் கருத்தோடு ஒப்புமைப்படுத்திக் காட்டுகிறார் (Gurusamy, 2000).

பாரியும் அடித்தள மக்களும்

சேரமான், மலையமான், பேகன் ஆகியோரைச் சென்று கபிலர் பாடியிருப்பினும் அவர்களைத் தனக்குரிய பாட்டுடைத் தலைவனாக அவர் கொள்ளவில்லை. காரணம் அத்தகைய உயர்ந்த பண்பு நலன்களை அவர்களிடத்தில் கபிலர் காணவில்லை. ஆனால், பறம்பிற்கோமான் பாரி இயல்பிலேயே அடித்தள மக்களுடன் இணைந்து வாழும் பெருநெறி வாழ்வைக் கைக்கொண்டிருக்கிறான் என்பதை அவன் ஆளும் விதத்தைக் கொண்டே கபிலர் அறிகிறார். பாரி ஆண்ட பறம்பு நாடு முந்நூறு ஊர்களை உடையதாகும். இந்த முந்நூறு ஊர்களையும் (இறையிலியாக) பரிசிலர்க்கே வழங்கிய பெருமையுடையவன் பாரி. மேலும், அவன் எளிய அடித்தட்டு மக்களோடு இணைந்து கலந்து வாழக் கூடியவன் என்பதாக,

"மால்புடை நெடுவரைக் கோடுதொறு இழிதரும்

நீரினும் இனிய சாயல்

பாரி வேள்பால் பாடினை செலினே" (Puliyur kesigan, 2010)

என்று பறம்பினையும் அதன் தீஞ்சுவைச் சுனைநீரையும் உவமையாக்கிக் காட்டுகிறார். நீர் வண்ணமோ, வடிவமோ அற்றது. ஆயினும் தான் சார்ந்த (தன்னைச் சார்ந்த) வண்ணத்தையும் வடிவத்தையும் விரும்பிக் கலந்து கொள்வது. பாரி சமூக வர்க்க பேதங்களுக்கு இடங்கொடாமல் அடித்தள மக்களோடும் இணைந்து கொள்வான் என்பதை இந்த உவமையின் வாயிலாகக் கபிலர் காட்டுகிறார். இப்பாடல் விறலியை ஆற்றுப்படுத்துவதாக அமைந்ததாகும்.

பழந்தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்து இலக்கணம் வகுத்த தொல்காப்பியர், இந்தப் பண்பாடு மிக்க ஆற்றுப்படுத்தும் செயலைப் புலவர்கள் பாடாண் திணையின் ஒரு துறையாகப் பாடி இருப்பதைக் காட்டுகிறார். இதுவே ஆற்றுப்படை ஆகும். ஆறு என்றால் பாதை, வழி என்று பொருள். படை என்றால் படுத்துவது - அனுப்பிவைப்பது என்று பொருள்.

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்

ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்

பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்

சென்று பயன்எதிரச் சொன்ன பக்கமும்"

கூத்தர் என்பவர் நாடகக் கலைஞர், பாணர், இசைக்கலைஞர், பொருநர் என்பவர் பாடலிலும் நடித்தலிலும் வல்லவர், போர்க்களத்தைச் சிறப்பித்துப் பாடுபவரும் ஆவார். விறலியானவள் ஆடல், பாடல், நடித்தல் கலைகளில் வல்ல பெண் ஆகிய இவர்கள் யாவரும் தம் கலைப்பண்பில் தலைசிறந்தவர்களாக விளங்கியபோதும் வாழ்வியல் நோக்கில் அடித்தள மக்களோடு கலந்து வாழ்பவர்களேயாவர் (Ilankumaran, 2003). இவர்கள் தம் படைப்பில் மட்டுமின்றி வாழ்க்கையிலும் அடித்தள மக்களோடு இணைந்திருந்தனர் என்பதை அறியலாம்.

பாரியைத் தன்னுடைய தலைவனாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டதற்குக் காரணம் அவன் எளிய மக்களுக்கும் இனியன் என்பதேயாகும். இந்தப் பண்பு கடவுட் குணத்திற்கு நிகரானது. இதனை,

நல்லவும் தீயவும் அல்ல குவி இணர்ப்

புல்லிலை எருக்கம் ஆயினும், உடையவை

கடவுள் பேணேம் என்னா ஆங்கு

மடவர் மெல்லியர் செல்லினும்,

கடவன், பாரி கை வண்மையே

என்பதாக, கடவுள் தன்னிடம் நாடி வருகிற பக்தர்கள் அன்போடு தருகிற அற்பப் புல்லையும், வாசமில்லாத எருக்கம்பூவினையும் கூட மறுக்காது விரும்பியேற்று அவர்களுக்கு அருள் செய்வதைப் போல, பாரி தன்னிடம் நாடி வருகிற கலைஞர்கள் அடித்தள மக்களாக (மடவர், மெலியராக இருந்தபோதும்) அவர்களை விரும்பமாட்டேன் என மறுக்காத கடவுள் உள்ளத்தினன் என்று போற்றுகிறார் (Puliyur kesigan, 2010). இந்தப் பண்பே கபிலரைப் பாரியோடு உயிர் நட்பாக - ஆழமாகப் பிணைத்துக் கொண்டது என்று அறியலாம்.

அரசனுடைய அவையில் பலரும் இருந்தபோதும் அங்கு புலவர்க்கும் ஏனைய கலைஞர்களுக்கும் முன்னுரிமை தரப்பெற்றது. இவர்கள் பெரும்பாலும் அடித்தள மக்களேயாவர். 'பழந்தமிழ் மன்னர்கள் உண்டு உடுத்து வாழ்வதையே தங்கள் குறிக்கோளாகக் கொள்ளவில்லை. அவர்களுடைய இடம் அரசவையாகும். பழந்தமிழ் மன்னர்கள் அலங்கரித்த அவைகள் பல பெயர்களால் வழங்கப் பெற்றன. ஓலக்கம், நாளோலக்கம், பெருநாளவை என்ற பெயர்களால் அவ்வவைகள் குறிக்கப் பெற்றன. அரசர்கள், அமைச்சர், ஐம்பெருங்குழு, எண்பேராயம், பிறநாட்டுத் தூதுவர் முதலியவர்களால் சூழப்பட்டிருப்பார்கள். அவ்வவைகளில் பரிசிலர் இனம் மட்டுமே அவ்வோலக்கத்தின்கண் ஆணை இன்றியும் நுழைதல் கூடும்' என்னும் கருத்து பரிசிலர்களாகிய அடித்தள மக்களுக்கு மன்னர்கள் வழங்கிய உயரிய மதிப்பை உணர்த்துகிறது பாரியின் அவைக்களம் மடவர்களுக்கும் மெலியர்களுக்கும் கூட வாழ்வளிக்கும் சிறப்புடையதாகத் திகழ்ந்திருப்பதைக் கபிலரின் புறப்பாடல்கள் வழியாக அறிய முடிகிறது.

பேதம் பாராட்டாது உயிர்கள் யாவினுக்கும் அருள்செய்யக் கூடியது மாரியின் வன்மையாகும். முன்னர் பாரியை 'நீரினும் இனிய சாயல்' என்று புகழ்ந்தவர் அதனினும் மேலான மழைக்கு ஒப்பாக்கிப் போற்றுவதை,

"பாரி பாரி என்றுபல ஏத்தி

ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்

பாரி ஒருவனு மல்லன்

மாரியும் உண்டுஈண்டு உலகுபுரப் பதுவே"

என்ற பாடலின் வழியாக அறியலாம் (Puliyur kesigan, 2010).

புலம்பெயர் துயரத்தின் முதற்குரல்

பொருள்தேடும் முயற்சியால் தாயகத்தை விடுத்து அயலகத்துக்காகப் புலம்பெயருகிற துயரத்தினை இன்றும் தமிழர்கள் அனுபவித்து வருகிறார்கள். அடிமைப்பட்டிருந்த தேசத்தில் உலகின் பல பகுதிகளிலும் தமிழர்கள் இவ்வாறு கட்டாயப்படுத்தப்பெற்று புலம்பெயர்ந்துசென்ற நிலையைப் பாரதியாரும் தன் பாடல்களில் பதிவு செய்துள்ளார். ஆனால், அதற்கெல்லாம் முன்பாகவே கபிலர் பாரியின் வஞ்சகக் கொலையையும் அதனால் தாயகம் விடுத்துப் புலம்பெயர வேண்டிய கொடுமையை அனுபவித்த பாரிமகளின் துயரத்தை,

"அற்றைத் திங்கள் அவ் வெண் நிலவின்,

எந்தையும் உடையேம் எம் குன்றும் பிறர் கொளார்

இற்றைத் திங்கள் இவ் வெண் நிலவின்,

வென்று எறி முரசின் வேந்தர் எம்

றும் கொண்டார் யாம் எந்தையும் இலமே!"

என்ற புறநானூற்றுப் பாடலின் வழியாக அறிய முடிகிறது (Puliyur kesigan, 2010). இப்பாடல் பாரிமகளிருடையது எனினும் அதில் கபிலரின் குரலும் இணைந்து ஒலிக்கிறது. அந்தத் துயரத்தைத் தானும் தொடர்ந்து எதிரொலிப்பதாக,

"மட்டு வாய் திறப்பவும், மை விடை வீழ்ப்பவும்,

அட்டு ஆன்று ஆனாக் கொழுந் துவை ஊன் சோறும்

பெட்டாங்கு ஈயும் பெரு வளம் பழுனி,

நட்டனைமன்னோ, முன்னே இனியே,

பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று,

நீர் வார் கண்ணேம் தொழுது நிற் பழிச்சிச்

சேறும் வாழியோ பெரும் பெயர்ப் பறம்பே

கோல் திரள் முன் கைக் குறுந் தொடி மகளிர்

நாறு இருங் கூந்தல் கிழவரைப் படர்ந்தே"

என்று பாடுவதன் மூலம் உணரலாம் (Puliyur kesigan, 2010). வருவோர்க்கெல்லாம் வரையாது வழங்கிய அவனில்லாத அவன் மலையை விட்டு வளமையும் நீங்கிற்று என்கிறார் கபிலர். ஆதலால் பறம்பு அடித்தள மக்களின் வாழ்வாதாரமாக விளங்கியது என்பதையும் அறிய முடிகிறது.

கபிலரின் இயற்கை நேயம்

ஆறறிவு பெற்ற மனிதகுலத்தவனாகிய பாரி, ஓரறிவுடைய முல்லையின் துயரத்தை நீக்கத் தேரைக் கொடுத்தவன் ஆவான். அத்தகைய வள்ளல் தன்னுடைய நாட்டினையும் நாட்டு மக்களையும் எவ்வாறு பரிந்தோம்பிக் காத்திருப்பான் என்பதைத் தனித்துச் சுட்ட வேண்டியதில்லை. அத்தகு பெருவள்ளல் வஞ்சனையால் கொல்லப்பட்ட வேளையில் அவன் நாடு அடையும் அழிவு கண்டு வருந்திப் பாடிய பாடல்கள் புறநானூற்றில் பதிவாகியுள்ளன. பாரி மாய்ந்த துயரத்தின் கையறு நிலைப்பாடல்களாக வெளிப்படும் அவை இயற்கைநேயத்தையும் வெளிப்படுத்தத் தவறவில்லை. ஊர்கூடி உண்ணும் நீர்நிலைக்கு ஊருணி என்று பெயர். திருவள்ளுவர், ஊருணி நீர்நிறைந்ததைப் பேரறிவாளன் பெற்ற திருவாகத் தமது குறட்பா வழியாக உணர்த்துவார். அதுபோலே ஊரார்

அனைவருக்கும் குளிப்பதற்கு மட்டுமின்றி பலவகைகளிலும் பயன்படுவது குளம் ஆகும். பாரியைப் போலவே ஊருக்கும் உறுதுணையாயிருந்த குளம் அவன் மறைவிற்குப் பின்னர் அழிவதைக் கண்டு,

"அறையும் பொறையும் மணந்த தலைய,

எண் நாள் திங்கள் அனைய கொடுங் கரைத்

தெள் நீர்ச் சிறு குளம் கீள்வதுமாதோ

கூர் வேல் குவைஇய மொய்ம்பின்

தேர் வண் பாரி தண் பறம்பு நாடே"

என்று வருந்திப் பாடுவதன் மூலம் அறியலாம் (Puliyur kesigan, 2010). இங்கு குளம் என்பது பாரியின் அடித்தள மக்கள் மீதான கருணைக்குரிய உவமையாகப் பயன்பட்டது. மேலும், பாரியின் மறைவுக்குப் பின்னர், "என் தலைவனான பாரி. அவனது வெற்றியை உடையது இந்த நாடு. வரகறுக்கவும், தினையரியவும், எள்ளிளங்காய் கறுக்கவும், வெள்ளை அவரைக்காய் அறுக்கவும், அன்று எங்கும் நிகழ்வதைக் காணலாம். புல்வேய்ந்த சிறு குடிசை தோறும் வருவார்க்கு மதுவை உண்ணக் கொடுப்பர் மலையர். நெய்யிலே கடலை துள்ள, அதனோடு சோறும் சமைத்து வீட்டிலுள்ளவரை உண்பிக்கப் பாத்திரங் கழுவுவர் இல்லின் மனைவியர். இவ்வாறெல்லாம் முன்னர் வளமுடன் விளங்கிய பறம்பின் புதுவருவாயும் இனிக் கெட்டுவிடும்" என்று அடித்தள மக்களின் வரலாற்று அழிவையும் படம்பிடித்துக் காட்டுகிறார் கபிலர் (Puliyur kesigan, 2010). 'பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம் நயனுடை யான்கண் படின்' என்பார் திருவள்ளுவர். நற்பண்புகளையுடைய ஒருவனிடம் சேருகிற செல்வம் ஊர் நடுவிலே உள்ள பயன்மிகுந்த பழ மரம் பழுத்ததைப் போல அடித்தள மக்களுக்கும் பயன்படும் என்பது அவர் கருத்து. இத்தகைய பயன்மரத்தைப் போல விளங்கியவன் பாரி என்பதை,

"கார்ப் பெயல் தலைஇய காண்பு இன் காலைக்

களிற்று முக வரியின் தெறுழ்வீ பூப்பச்,

செம் புற்று ஈயலின் இன்அளைப் புளித்து!

மெந்தினை யாணர்த்து நந்துங் கொல்லோ

நிழலில் நீளிடைத் தனிமரம் போலப்,

பணைகெழு வேந்தரை இறந்தும்

இரவலர்க்கு ஈயும் வள்ளியோன் நாடே!"

புறநானூற்றில் பதிவு செய்கிறார். 'கார் பெய்து மாறிய காலத்தில், யானை முகத்துப் புள்ளிபோலப் பறம்புமலைச்சாரலில் எங்கும் புத்தம் புது மலர்கள் பூத்தன. அவ்வேளையிலே, செம்புற்றின் ஈயலை இனிய மோரோடுங் கூட்டிச் சமைத்த புளிங்கறியை உண்போம் (Puliyur kesigan, 2010). அத்துடன், சிறு தினையான புதுவருவாயும் மிக உடைத் தாயிருந்தது அந்நாடு. எல்லாம் முன்பு நிழலற்ற நெடிய வழியில், தனிமரம்போல் நின்று, வேந்தரினும் மிகுதியாக வழங்கும் வண்மையுடைய பாரியின் இந் நாடு, அவனை இழந்துவிட்ட காரணத்தால், இனி அழிந்தேதான் போய்விடுமோ?' என்பது கபிலரின் வருத்தம் (Puliyur kesigan, 2010).

கபிலரும் அடித்தள மக்களும்

கலைஞர்களுக்கு உதவும் வள்ளல்களை வாழ்த்திப் புகழ்பெறச் செய்யும் கலைஞர்கள், தாங்களும் வள்ளல்களாய் இருந்திருக்கின்றனர். இதை ஆற்றுப்படை இலக்கியம் உணர்த்துகிறது. கபிலர் பல மன்னர்களைப் புகழ்ந்து பாடியுள்ளார். அதன்மூலமாக அவர் பெருஞ்செல்வத்தை ஈட்டியிருத்தல் வேண்டும் என்றே பலரும் கருதுவர். பின் அவருக்கு வறுமை நிலை எவ்வாறு வந்தது என்னும் வினா எழலாம். தான் பாடிப் பரிசிலாகப் பெற்ற பொருட்களைக் கபிலர் தன்னுடையதாக மட்டுமே

வைத்திருக்காமல் தன்னோடு கூடிய பரிசிலர்க்கும் அடித்தள மக்களுக்கும் தந்து தானும் ஒரு வள்ளலாய் விளங்கியிருக்கிறார். இது கபிலரின் பண்பாகவே விளங்கியது என்பதைச் சான்றுகள் வழியாகவும் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

“கபிலர் பெரு வள்ளலாகிய வேள்பாரியைச் சார்ந்து பலநாள் அவனோடு கூடி வாழ்ந்திருந்தனரே. அக்காலத்தில், அவன் (பாரி), தன் ஆருயிர் நண்பராகிய கபிலருக்குப் பெருஞ்செல்வம் நல்கியிரானோ என்று ஐயம் உண்டாதல் கூடும். வள்ளலாகிய பாரி, தன் நண்பருக்கு வேண்டும் பொருள்களைக் குறைவின்றி நல்கிப் புரந்திருக்கலாம். கபிலர், பாரியளிக்கும் பொருளைத் தம்பால் வரும் இரவலர் முதலியோருக்கு நல்கிச் செலவிட்டிருக்கலாம். புலவர் இத்தகைய இயல்பினை உடையவர் என்பது புறநானூற்றால் அறியப்படுகிறதன்றே. அன்றியும் கபிலர் தம் வாழ்க்கைக்கு வேண்டும் பொருள் அனைத்தும் குறைவின்றிப் பாரிபால் பெற்று வாழ்ந்தனராகலின் அவன்பால் பெருநிதி பெற விழைந்திருக்கமாட்டார். கெழுமிய நண்பும் விழுமிய பண்பும் உடைய வள்ளல், தம்மைப் புரந்து வரும் நாளில் தம் வாழ்நாள் முழுவதும் வளம்பெற வாழத்தக்க பெரும்பொருள் நல்குமாறு புலவர் அவன்பால் கொள்ளுதல் வேண்டாவன்றோ? இவற்றால் கபிலர் பாரியொடு வாழ்ந்திருந்த காலத்தில் யாதொரு குறைவுமின்றி வளம்பெற வாழ்ந்திருந்தனரேயன்றி, பெருஞ்செல்வராய் வாழ்ந்திருந்தார் அல்லர் என்று கொள்ளுதல் பொருந்தும்.” என்று கபிலருடைய அடித்தள மக்களோடு இணைந்த வாழ்வினைப் பற்றிக் குறிப்பிடுகிறார் (Venkatarajulu, 1998).

'பொய்யா நாவிற் கபிலன்' என்றும், 'வாய்மொழிக் கபிலன்' என்றும் புலவர் பிறர் இவரைப் புகழ்ந்து கூறியிருப்பதனால் அறியலாகும். தன் மனைவியைத் துறந்திருந்த பேகனை, அவளுடன் கூடி வாழுமாறு வேண்டியதனான்' இவரது அருட்டிறன் விளங்கும் என்றும் வேள்பாரியோடு இவர் வாழ்ந்திருந்த காலத்தில், அவனது பறம்பு மலையை மூவேந்தரும் முற்றுகை செய்தபோது, அகத்தே வாழ்வோர்க்கு உணவுப் பொருள் குறைபடாவாறு சூழ்ச்சி செய்து உணவளித்துக் காத்து வந்ததுவும், அவன் துஞ்சும்போழ்து அவனோடு உடனுயிர் நீக்கத் துணிந்ததுவும், அவன் சிலகாலம் உயிர் வாழ்ந்திருக்குமாறு வேண்டிக் கொண்டதற் கிணங்கி உயிர் பொறுத்திருந்து அவன் மகளிரை மணஞ்செய்து கொடுக்க எண்ணி அரசர்பாற் சென்று வேண்டியதுவும், அவர்கள் உடன்படாராகவே அம்மகளிரின் தனி நிலைமைக்கு வருந்திப் பின்னர் மலையனுக்கு அவர்களை யீந்து தமது கடனை நிறைவேற்றியதுவும் நம் புலவரின் நண்பு முதலிய பண்பினை வெள்ளிடை மலைபோல் விளங்கக் காட்டும். அன்றியும், கழாத்தலையார் என்னும் புலவரைக் கூறுமிடத்து அவரைப் புகழ்ந்து கூறியிருத்தலை நோக்கின், இவர், புலவரை நன்கு மதிக்கும் பெருந்தகைமையுடையவர் என்பதும் நன்கு புலனாகும். என்றும் அறிய முடிகிறது (Venkatarajulu, 1998).

முடிவுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் பெரும் படைப்பினை நல்கியவர்கள் யாவரும் எளிமையோடும், ஏழ்மையோடும் வாழ்ந்த அடித்தள மக்களோடு இணைந்திருந்தவர்களேயாவர். அவர்தம் படைப்புகளிலும் கூட அம்மக்களின் வரலாறுகளே பெரிதும் பதிவாகியிருக்கின்றன. பொன்னும் பொருளுக்கும் பெருமைக்கும் மன்னர்களைப் புகழ்ந்து பாட வேண்டிய தேவையேற்பட்டாலும் வாழ்வியலைப் பாடுகிற வேளையில் அவர்கள் எளிய மாந்தரையே தங்களின் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டனர். அவர்களிலும் கூடப் பல புலவர்கள் எளிய வாழ்க்கை வாழும் இயற்கை நெறி பிறழாத வேந்தர்களைப் போற்றிப் பாடுவதற்கு முன்னின்றனர். அவ்வகையில் பெரும்புலவராகவும் சங்க இலக்கியங்களில் முதன்மைப் புலவராகவும் விளங்கியவர் குறிஞ்சிக் கபிலர் ஆவார். பாண்டிய நாட்டு எல்லையில் தோன்றிய போதும், மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்புகாது, பாண்டியனைப் பாடாது, சோழனையும் பாடாது மூவேந்தர்களிடம் தன்னை அவைக்களப்படுத்திக் கொள்ளாது குறுநில மன்னனாகிய மக்களோடு மக்களாக வாழக்கூடிய கலைஞர்களைப் போற்றிப் புரக்கக் கூடிய முந்நூறு ஊர்களையும் பரிசிலர்க்கு அளித்துவிட்ட பாரியின் அவையிலேயே இருந்து அவனுக்கு உற்ற நண்பராக விளங்கியிருக்கிறார். பறம்புமலையையும் அதனைச் சார்ந்த பகுதிகளின் வாழ்வியலை நன்றாக அறிந்து கொண்ட கபிலர் தான் படைத்துள்ள புறப்பாடல்களில் பெரும்பகுதியில் அத்தகைய அடித்தள மக்களின் வாழ்க்கைப்

பதிவுகளையும் வரலாற்றையும் அவர்கள் படும் துயரங்களையும் பதிவுசெய்துள்ளார் என்பதை இக்கட்டுரை எடுத்துக் காட்டியுள்ளது.

References

Gurusamy, M.R.P., (2000) Kabilam, Thirukovilur Panpattu Kazhagam, Thirukovilur, India

Ilankumaran, R., (2003) Tholkappiyam Porulathikaram, Tamilmann Pathippagam, Chennai, India.

Kundrakudi Adigal, (2005) Thirukkural Urai, Arulneri Pathippagam, Kundrakudi, India.

Puliyur Kesigan, (1974) Pathitrupathu Theylivurai, Pari Nilaiyam, Chennai, India.

Puliyur Kesigan, (2010) Purananuru, Paari Niliyam, Chennai, India.

Venkatarajulu Reddyar, V., (1998) Kabilar, International Institute of Tamil Studies, Chennai, India

Funding: No funding was received for conducting this study.

Conflict of Interest: The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License